தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை
மலர் 2, இதழ் 1, 2021
ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்
பன்னாட்டுத் தரப்புத்தக எண்: 9788194845959
இணையதளம்: http://restpublisher.com/book-series/ctll/

# தமிழ் உரிச்சொற் பனுவல் நிகண்டின் உள்ளடக்கமும் புதிய மரபுகளும்

வடிவேல்முருகன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: gvmurugantnj@gmail.com

**ஆசிரியர் குறிப்பு**

*முனைவர் கு. வடிவேல்முருகன், திருச்சிராப்பள்ளி உருமு தனலெட்சுமி கல்லூரித் தமிழ்த்துறையில் உதவிப்பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டங்களைத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முடித்துள்ள இவர், கூடுதலாக அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் பாடத்திலும் முதுகலைப் படிப்பை முடித்துள்ளார். முதுகலை முடிக்கும்போதே தேசியத் தகுதித் தேர்வில் (UGC - NET) தேர்ச்சி பெற்றவர். “தமிழ் மரபிலக்கணங்களில் வினை வகைகளும் வினை வகைப்பாட்டுக் கூறுகளும்” என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். இசைப்பயிற்சியில் பட்டயக் கல்வி, யோகா முதுநிலை பட்டயக் கல்வி, உயர்நிலைத் தமிழ்த் தட்டச்சு பயிற்சி, கணிணியை மிகச்சுலபமாகக் கையாளும் திறன், தமிழ்ச் சுவடியியல் பயிற்சி, தமிழ்க் கல்வெட்டுப் பயிற்சி, கிரந்தம் மற்றும் தெலுங்கு மொழிப்பயிற்சி போன்ற பல பயிற்சிகளைப் பெற்று சிறப்புத் தகுதிகளைக் கொண்டிருப்பவர். தமிழ்நாடு அரசு நிதி நல்கையில் தமிழ்ப் பல்கலைக்கழக அகராதியியல் துறையில் கிறித்தவச் சமயக் கலைச்சொல் அகராதி எனும் திட்டத்தில் 2014 நவம்பர் முதல் 2015 ஏப்பிரல் வரையுள்ள காலத்தில் சொல் திரட்டுநர், ஆய்வு உதவியாளர் மற்றும் கணிப்பொறி உதவியாளராகப் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. தமிழ் இலக்கிய, இலக்கண ஆய்வுகளில் தொடர்ந்து ஈடுபட்டு இதுவரை 30 ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டுள்ளதோடு, 15 பயிலரங்குகளிலும் 40 - க்கும் மேற்பட்ட கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டுள்ளார்.*

==========================================================

**முன்னுரை**

*தொல்காப்பிய உரியியலில் தோன்றிய தமிழ்ச் சொற்பொருள் விளக்க மரபானது 9 - ஆம் நூற்றாண்டில் தோன்றிய திவாகரத்தின்வழி ‘நிகண்டு’ என்னும் தனி வகையாகத் தமிழ் மரபில் நிலைபெற்றது. ஐரோப்பியர் வருகைக்குப்பின் ‘அகராதி’ என்னும் வடிவம் தமிழ் மரபில் செல்வாக்கு பெற்றபின்பும், தமிழில் நிகண்டுகள் உருவாக்கும் பணி நடைபெற்று வந்துள்ளதைத் தமிழ் இலக்கிய வரலாற்றின்வழிக் காணமுடிகிறது. மனனக் கல்விமுறைக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ள இந்நிகண்டுகளிலிருந்து பெருமளவிலான தரவுகளைத் தொடக்கக் காலத் தமிழ் அகராதிகள் பெற்றுள்ளன. இருப்பினும், தமிழ் நிகண்டுகளில் உள்ள சொல்வளம் இன்னமும் தமிழுலகால் முழுமையாக அறிந்து கொள்ளவும் பயன்படுத்தப்படவும் இல்லை. தமிழ்மொழியின் சொற்களஞ்சியங்களாக அமைந்திருக்கும் நிகண்டுகளில் அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்டதான “தமிழ் உரிச்சொற் பனுவல்” என்னும் நிகண்டின் உள்ளடக்கமும் அதன் ஆசிரியரால் இந்நிகண்டில் மேற்கொள்ளப்பட்ட சில புதிய மரபுகளையும் - முயற்சிகளையும் இனங்காட்டுவதாய் அமைகிறது இக்கட்டுரை. இவற்றிற்கு முன்னதாக, நிகண்டு குறித்த விளக்கங்களையும் சுருக்கமாக இக்கட்டுரையில் காணலாம்.*

**நிகண்டு - வரலாறு**

நிகண்டு என்னும் சொல்லுக்குக் கூட்டம் அல்லது தொகுதி என்பது பொருளாகும். நிகண்டு என்ற சொல் உண்மை, இன்ன சொல்லுக்கு இன்ன பொருள், இன்ன பொருளுக்கு இன்ன பெயர் போன்ற பொருள்களைக் குறிக்கின்றன. இதனை ஆராய்ந்தால் ‘நிகழ்ந்தது’ என்ற சொல், உலக வழக்கில் ‘நிகண்டு’ என்று மருவித் திரிந்து வழங்கியதென்று கொள்வதே பொருத்தமாகும். சங்கத் தமிழுக்குப் பின்னர் காலந்தோறும் புலவர்கள் கையாண்ட செய்யுள் நடையிலும் கவிதைப் பண்பிலும் சொற்களின் தன்மையிலும், வடிவங்களிலும் தொடர்களின் அமைப்பிலும் மொழிநடையிலும் பல்வேறு புதிய இயல்களும் மாறுதல்களும் தோன்றின. பழந்தமிழ் இலக்கியங்களில் கையாளப்பட்ட சொற்களின் பொருள்களை அறிந்துகொள்ளப் பிற்காலத்தில் கடினமாக இருந்திருக்கக்கூடும். புலவர்களுக்கும் இலக்கியப் பயிற்சியில் ஈடுபட்டவர்களுக்கும் பண்டைக்கால நூல்களையும் பாடல்களையும் அறிந்து கொள்வதற்குக் கருவி நூல்கள் என்னும் நோக்கு நூல்கள் தேவையாயிருந்தன. அதாவது, தமிழ்ச் சொற்களுக்குரிய பொருள்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் அறிந்து கொள்வதற்குத் தேவையான சூழல்கள் ஏற்பட்டபோது உருவானவையே இந்நிகண்டு நூல்களாகும். காலந்தோறும் மொழியின் வளர்ச்சியில் அதன் இயல்புக்கேற்பப் பல சொற்கள் புதியனவாய்த் தோன்றியும், பல சொற்கள் பயன்பாடு குன்றி வழக்கில் மறையவும் தொடங்குகின்றன. இவற்றைத் தொகுத்துக் காணும் சூழல் ஏற்படும்போதுதான் நோக்கு நூல்களின் (Reference Books) இன்றியமையாமையை உணர முடியும். அவ்வகையில் முன்னையோர் அரிதின் முயன்று தொகுத்த நூல்கள் நிகண்டு நூல்களாகும். மொத்தத்தில், நிகண்டுகள் ஒரு சொல் குறிக்கும் பல பொருள்களை நமக்குத் திரட்டித் தருகின்றன. சொற்களைத் தொகுத்துத் தருவதோடு அவற்றின் பொருள்களையும் வரையறுத்து உணர்த்துவது நிகண்டு நூல்களின் பொதுவியல்பாகும். எனவே, மொழிப்பயிற்சிக்கு இது ஏற்றதொரு கருவி நூலாய் அமைந்துள்ளமை நன்கு விளங்கும். நிகண்டு என்பதற்கு ‘உரிச்சொற் பனுவல்’ என்பதும் பொருளாகும்.

**நிகண்டு கற்றல்**

தமிழ்மொழியின் முக்கியக் கூறுகளுள் நிகண்டு என்பது தனிச்சிறப்புடையதாகும். தமிழ் கற்போர் புலமைபெற இலக்கியம், இலக்கணம், நிகண்டு என்னும் மூன்றையும் கண்களாக முன்னையோர் போற்றி வந்தனர். இலக்கிய, இலக்கணப் பயிற்சிக்கு முதலாவதாக நிகண்டு கற்றலைப் புலவர் - ஆசிரியப் பெருமக்கள் வலியுறுத்தியுள்ளனர். சிவஞானச் சுவாமிகள் வழங்கிய நன்னூல் விருத்தியுரையுள், இலக்கணம் கேட்பதற்குரியோரின் தகுதிப்பாடுகள் குறித்து உரைக்குமிடத்து,

> "அவற்றை (இலக்கணத்தை) யாவரும் உணரவெனவே, முன்னர் நிகண்டு கற்றுச் செய்யுள் ஆராய்ச்சியுடையார்க்கே அவற்றை ஆராய்வுழி, அவற்றின்கண் உளவாகிய செய்கை வேறுபாடுகளும் சொல்முடிவு, பொருள்முடிவு வேறுபாடுகளும் இன்னவென்று துணியப்படும்"
>
> (நன்னூல் விருத்தியுரை, சிறப்புப் பாயிரவுரை, ப.6)

என்று எடுத்துக்காட்டுகிறார். இதனால் தமிழ் பயிலத் தொடங்குவார் நிகண்டு நூல் கற்பது மிகவும் இன்றியமையாததாக அந்நாளில் கருதி வந்தனர் என்பது தெரியவரும்.

## தொல்காப்பியமும் நிகண்டும்

நிகண்டுகளின் தோற்றத்திற்குத் தொல்காப்பியமே அடிப்படையாக இருந்துள்ளன. தமிழ் அகராதியியல் வரலாற்றில் சொற்பொருள் கூறும் வகையினைச் சார்ந்த நிகண்டுகளுக்குத் தொல்காப்பியம் மூலநூலாகத் திகழ்ந்தது என்பதற்குச் சான்றாகத் தொல்காப்பிய நூற்பாக்கள் பல திவாகரத்தில் இடம்பெற்றுள்ளனவற்றைக் கொண்டு அறியலாம். உதாரணமாக, கருப்பொருள்கள் விளக்கம் கூறும்,

> "தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
> செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
> அவ்வகை பிறவும் கருவென மொழிப" (தொல்.பொருள்.அகம்., நூ.20)

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் திவாகர நிகண்டுத் தொகுதிகள் அமைந்துள்ளதைக் காணலாம். தொல்காப்பியம் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, யாழ் என ஏழுவகைக் கருப்பொருள்களைக் குறிக்கின்றது. இக்கருப்பொருள்களோடு தொல்காப்பியத்தின் சில இயல்களும் திவாகர நிகண்டில் எங்ஙனம் பெயர்த்தொகுதியாகின்றன என்பதைப் பின்வரும் அட்டவணை மூலம் அறியலாம்.

| வ.எண் | தொல்காப்பியம் | திவாகர நிகண்டின் பெயர்த்தொகுதி |
|---|---|---|
| 1. | தெய்வம் | தெய்வப் பெயர்த் தொகுதி |
| 2. | உணவு | பல்பொருள் பெயர்த் தொகுதி |
| 3. | மா, புள் | விலங்கினப் பெயர்த்தொகுதி |
| 4. | மரம் | மரப்பெயர்த் தொகுதி |
| 5. | பறை, யாழ் | செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி |
| 6. | வினையியல் | செயல் பற்றிய பெயர்த் தொகுதி |
| 7. | உரியியல் | ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதி (Polysemy) |
| 8. | | பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி (Group Names) |

எனவே, நிகண்டுகளின் தோற்றத்திற்கு மூலமாய்த் தொல்காப்பியம் அமைந்து விளங்குவதை நன்குணர முடிகிறது. இனி, தமிழ் உரிச்சொற் பனுவல் நிகண்டு குறித்துக் காணலாம்.

## தமிழ் உரிச்சொற் பனுவல்

'தமிழ் உரிச்சொற் பனுவல்' இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் உருவாக்கி வெளியிடப்பட்ட தமிழ் நிகண்டாகும். இதுவே, நிகண்டு மரபில் வெளிவந்த இறுதி நிகண்டாகும். இதனைக் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலை அடுத்த இராஜாக்க மங்கலம் என்னும் ஊரைச் சேர்ந்த கவிராய பண்டிதர் இராமசுப்பிரமனிய நாவலர் என்பார் இயற்றியுள்ளார். இவரது மறைவிற்குப்பின் இவரது மகனார் திரு. ஆர்.எஸ். மோகனராஜன் அவர்கள் இந்நிகண்டு நூலின் எஞ்சிய பணிகளைச் செய்து, 1984 - ஆம் ஆண்டு ஆசிரியரின் சொந்தப் பதிப்பகமான 'செந்தமிழ் நிலையம்' வாயிலாக வெளியிட்டுள்ளார். இதனைத் தவிர்த்து வேறு எந்தப் பதிப்பையும் இந்நிகண்டு நூல் வடிவம் பெறவில்லை.

## தமிழ் உரிச்சொற் பனுவல் - பெயர்க்காரணம்

தமிழ் நிகண்டு என்னும் சொல்லிற்கு இணையாக உரிச்சொல், உரிச்சொற் பனுவல் எனும் சொற்கள் வழக்கில் இருந்துள்ளன. பிற்காலத்து எழுந்த சொற்பொருள் விளக்கும் நூல்கள் உரிச்சொற்களுக்கு மட்டுமின்றி எல்லாச் சொற்களுக்கும் பொருள் கூறியிருப்பினும் அவை உரிச்சொற் பனுவல் என்றே வழங்கப்பட்டன.

## உரிச்சொற்பனுவல் - உள்ளமைப்பு

தமிழ் உரிச்சொற் பனுவல் என்னும் இந்நிகண்டு பொது அமைப்பில் பிங்கல நிகண்டைப் பின்பற்றிய நிலையில் அமைந்திருந்தாலும், பெயர்த் தொகுதிகள் பெரிதும் திவாகர நிகண்டோடே ஒத்துக் காணப்படுகின்றன. இதில் மொத்தம் 7532 நூற்பாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிகண்டில் அமைந்த பத்துத் தொகுதிகள் பின்வருமாறு:

1. கடவுட் பெயர்த் தொகுதி
2. மக்கட் பெயர்த் தொகுதி
3. விலங்கின் பெயர்த் தொகுதி
4. மரப்பெயர்த் தொகுதி

5. பல்பொருட் பெயர்த் தொகுதி
6. இடப்பெயர்த் தொகுதி
7. பண்புப் பெயர்த் தொகுதி
8. தொழில் பெயர்த் தொகுதி
9. ஒலிப்பெயர்த் தொகுதி
10. ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதி

மேற்குறிப்பிட்ட பத்துத் தொகுதிகளுள் முதல் நான்கு தொகுதிகள் திவாகர நிகண்டில் இருக்கும் வரிசை அமைப்பிலேயே தமிழ் உரிச்சொற் பனுவல் நிகண்டிலும் அமைந்துள்ளன. திவாகரத்தின் ஐந்தாம் தொகுதியான இடப்பெயர்த் தொகுதியும் ஆறாம் தொகுதியான பல்பொருட்பெயர்த் தொகுதியும் இந்நிகண்டினுள் முறையே ஆறு மற்றும் ஐந்தாம் தொகுதிகளாக மாற்றம் பெற்றுள்ளன. திவாகரத்தின்கண் அமைந்த ஏழாவது தொகுதியானச் செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி தமிழ் உரிச்சொற் பனுவலில் இடம்பெறவில்லை. திவாகரத்தின் எட்டு, ஒன்பது மற்றும் பத்தாம் தொகுதிகளானப் பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி, ஒலி பற்றிய பெயர்த் தொகுதி ஆகியவை உரிச்சொற் பனுவல் நிகண்டில் முறையே ஏழு, எட்டு மற்றும் ஒன்பதாம் தொகுதிகளாக அமைந்துள்ளன. திவாகரத்தின் பதினோராம் தொகுதியான ஒருசொல் பலபொருட் பெயர்த் தொகுதி இங்குப் பத்தாம் தொகுதியாக மாற்றப்பட்டுள்ளது. திவாகரத்தில் பன்னிரண்டாம் தொகுதியாக அமைந்த பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி தமிழ் உரிச்சொற் பனுவலில் இடம்பெறவில்லை. தமிழ் உரிச்சொற் பனுவலின் முதல் ஒன்பது தொகுதிகள் ஒரு பொருட் பன்மொழி என்னும் அமைப்பிலும், பத்தாம் தொகுதி பலபொருள் ஒருசொல் என்னும் அமைப்பிலும் அமைந்துள்ளது. இவ்வமைப்பு பிங்கலம் உள்ளிட்ட நிகண்டுகளின் அமைப்பு வகையில் அடங்குகிறது.

உரிச்சொற் பனுவலின் பெயர்த் தொகுதிகளின் விளக்கங்கள்

- ❖ கடவுட் பெயர்த் தொகுதி என்னும் முதல் தொகுதியில் இறையோன் (சிவன்) முதல் மூத்தாள் முடிய 26 கடவுளர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. சிவபெருமானுக்கென்று அமைந்த நூற்பாவில் 119 பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவே, இத்தொகுதியிலும், இந்நிகண்டிலும் அதிக அளவிலான பெயர்களைத் தொகுத்த நூற்பாவாகும். இதில் முருகனுக்கென அமைந்த நூற்பாவில் 55 பெயர்களும், திருமால் பெயர்கள் 64 - உம், திருமகள் பெயர் 23 - உம் கொடுக்கப்பட்டுள்ளன. இப்படித் தெய்வப் பெயர்களைத் தொகுத்து அதிக அளவினைக் கொண்ட இத்தொகுதியில் மொத்தம் 260 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன.
- ❖ இரண்டாவது மக்கள் பெயர்த் தொகுதியாகும். மக்களுக்கான பொதுப்பெயர்கள், ஆண்பால் பெயர்கள், பெண்பால் பெயர்கள், அரசன், பேடு, போர் வீரர், படை வகையின் பெயர்கள், ஐந்திணையில் வாழும் மக்களின் பெயர்கள், உறவுமுறை, மருத்துவர்கள் போன்றவற்றின் பெயர்கள் இம்மக்கள் பெயர்த் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியில் மொத்தம் 977 நூற்பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.
- ❖ மூன்றாவது விலங்கின் பெயர்த் தொகுதி. இத்தொகுதியில் விலங்கின் பெயர்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பொதுப்பெயர்கள், ஆண் பெண் பெயர்கள், இளமைப் பெயர்கள், பறவையினங்கள், ஊர்வன, நீர் வாழ்வன போன்றவை இத்தொகுதியில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் 363 நூற்பாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- ❖ நான்காவதாகிய மரப்பெயர்த் தொகுதியில் மரவகைப் பெயர்களான செடிகள், கொடிகள், மரங்கள், மரத்தின் உறுப்புகளான வேர், கிளை, இலை, பூ உள்ளிட்டவைகளின் பெயர்கள், மருந்தாகப் பயன்படும் தாவரம் போன்ற பெயர்கள் என்று 608 நூற்பாக்களில் தொகுக்கப்பட்டுள்ளன.
- ❖ ஐந்தாவது பல்பொருட் பெயர்த் தொகுதி. இதில் உணவு வகைகள், வணிகப் பொருட்கள், கலன்கள், சிறுகருவிகள், அளவுக் கருவிகள், சூதாடு கருவி, இயற்கைப் பொருட்கள், மணி வகைகள், உலோகங்கள், ஆடை வகைகள், இருக்கை முதலிய பொருட்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தொகுதியில் 863 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன.
- ❖ இடப்பெயர்த் தொகுதி என்ற ஆறாவது தொகுதியில் மூவுலகு, கடல், விண், திசைகள், பலவகை நிலங்கள், பல்வேறு நாடுகள், குறிப்பிட்ட சில ஊர்கள், வழி, வீடு, கூரை, மதில், கோட்டை, கோயில், சோலை, மலை போன்ற பெயர்கள் 565 நூற்பாக்களில் கொடுக்கப்பட்டுள்ளன.
- ❖ ஏழாவது பண்புப் பெயர்த் தொகுதி. இதிலமைந்த 963 நூற்பாக்களில் எண்கள், அளவைகள், வடிவங்கள், உருவங்கள், நிறங்கள், புலன் உணர்வு, அறிவுநிலை, குணநலன், தோற்றம், செயல், ஊடல், கூடல், வட்டக்குறி முதலியன உள்ளிட்ட பெயர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. வறுமை முதலிய நிலைகள், மயக்கம் போன்றவற்றின் பெயர்களும் பண்புப் பெயராகத் தரப்பட்டுள்ளன.
- ❖ 511 நூற்பாக்களைக் கொண்டுள்ள தொழிற்பெயர்த் தொகுதி என்ற எட்டாவது தொகுதியில் செய்தலின் பெயர், முயற்சி, உழைப்பு, விளையாட்டு, ஆடல், கூத்தாடல், மாயோன் ஆடல், முருகன், கொற்றவை, திருமகள், நடத்தல், அசைதல், நிற்றல், இருத்தல் போன்றவை குறித்த சொற்களும் அவற்றின் பொருள்களும் அடங்கியுள்ளன.
- ❖ ஒன்பதாவது ஒலிப்பெயர்த் தொகுதியாகும். இதில் பலவகைப்பட்ட ஓசையின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. மூச்சோசை, கொட்டாவி, பெருமூச்செறிதல் போன்ற மனிதர்களின் ஓசைகள், விலங்கு மற்றும் பறவைகளின் ஓசைகள், எழுத்தோசைகள், ஓசைச்சொற்கள், இடைச்சொற்கள், பாவின் ஓசைகள் போன்ற பெயர்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் 356 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன.
- ❖ பத்தாவது தொகுதி ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதி. இத்தொகுதியில் பல பொருட் சொற்கள் அகர வரிசையில் இடம்பெற்றுள்ளன. 2066 நூற்பாக்கள் இதில் காணப்படுகின்றன.

தமிழ் உரிச்சொற் பனுவலின் சிறப்புகளும் புதிய மரபுகளும் (முயற்சிகளும்)

**1. நூற்பாக்களும் சொற்தொகையும் மிகுதி**

தமிழ் நிகண்டுகளில் அதிகளவில் நூற்பாக்களையும் சொற்தொகையையும் கொண்ட நிகண்டாகத் தமிழ் உரிச்சொற்

பனுவல் நிகண்டு அமைந்துள்ளது. இந்நிகண்டினுள் அமைந்த பலபொருள் ஒருசொல் பெயர்த்தொகுதி மிக விரிந்த நிலையில் 2066 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. காலந்தோறும் சொற்களுக்கானப் பொருள்பரப்பில் ஏற்படும் பெருக்கத்தை இவ்வெண்ணிக்கை உணர்த்துகின்றது. மேலும், இப்பலபொருள் ஒருசொல் பெயர்த்தொகுதியில் இடம்பெற்றுள்ள சொற்கள் முழுமையும் அகரவரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. இவை இந்நிகண்டு நூலின் தனிச்சிறப்புக்களுள் தலையாயது மட்டுமின்றி நிகண்டு மரபில் புதிய முயற்சியுமாகும்.

## 2. தமிழ்ச்சொல் வடிவங்கள்

தமிழ்மொழியின் மீது மிகுந்த பற்றுக்கொண்ட இந்நிகண்டின் ஆசிரியர் தாம் இயற்றிய இந்நூலிற்குத் 'தமிழ் உரிச்சொற் பனுவல்' என்னும் தமிழ் வழக்கு நோக்கிய பெயரை அமைத்தது மட்டுமல்லாமல், நூற்பெயருக்கு ஏற்றாற்போல வடமொழிச் சார்பாய் வந்த சொல் வடிவங்களை முற்றிலும் தவிர்த்துத் தமிழ்ச்சொல் வடிவங்களையே தம் நூலுள் தொகுத்துள்ளார். இதனை,

"பிறமொழிச் சொற்களை நெறிப்பட நீக்கி
தமிழ்உரிச் சொற்களின் தகுபொருள் விளங்கப்
பைந்தமிழ் உரிச்சொற் பனுவல் தந்தனன்"

(தமிழ் உரிச்சொற் பனுவல், தற்சிறப்புப் பாயிரம்,. ப.1)

என்ற தற்சிறப்புப் பாயிர வரிகள் நன்கு உணர்த்துகின்றன.

நிகண்டில் பல வடமொழிப் பெயர்கள் தமிழ் வழக்கு நோக்கி மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. குறிப்பாக, தெய்வப் பெயர்த் தொகுதியில் ஆசிரியரால் இம்முயற்சி பெரிதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 'முகம்' என்ற வடமொழிச் சொல்லிற்கு இணையாக 'முன்னம்' என்ற சொல் ஆசிரியரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனை முகத்தோன், ஆறு முகத்தோன் என்பனவற்றிற்கு மாற்றாக, 'ஆனை முன்னத்தோன்' (நூ.12), 'ஆறு முன்னத்தோன்' (நூ.13) என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இருபத்தேழு நட்சத்திரங்கள், பன்னிரு இராசிகள், பன்னிரு திங்கள்கள் போன்றவற்றிற்குத் தமிழ்ப் பெயர்களே நிகண்டினுள் ஆட்சி பெற்றுள்ளன. புத்தரைக் குறிப்பதற்குப் 'அறிவன்' என்ற பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாகவே, பிற நிகண்டுகளில் தெய்வங்களின் பெயர் வடமொழியில் வழங்கப்பெறும். ஆனால், இந்நிகண்டில் தெய்வப் பெயர்கள் இடம்பெறும் தெய்வப் பெயர்த்தொகுதி உட்பட அனைத்துச் சொற்களும் அவற்றிற்குரிய பொருள்களும் தமிழ் வழக்கிலேயே அமைக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் இந்நிகண்டில் தனித்தமிழ் வழக்கு பயன்படுத்தப்பெற்றது நிகண்டு மரபில் புதுமுயற்சியாகும்.

## 3. சொல்லாக்க முயற்சிகள்

ஒரு மொழியில் தன் சம காலத்தில் வளர்ச்சியடைந்து வரும் அறிவியல் துறைகளுக்கு ஏற்ப புதுப்புதுச் சொற்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இல்லையேல், அம்மொழியின் வளர்ச்சியில் ஒரு தேக்கநிலை ஏற்படுவது தவிர்க்க - தடுக்க முடியாததாகிவிடும். முன்வந்த பல நிகண்டு ஆசிரியர்களும் இதுபோன்ற நிலையினைச் சந்தித்து, சிந்தித்துத் தம் காலத்து மொழிச் சூழலுக்கேற்ப சில சொல்லாக்க முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர். எனினும், இவர்களது முயற்சி என்பது ஏற்கனவே வழக்கில் இருக்கும் ஒரு சொல்லிற்கு இணையாக மற்றொரு சொல்லை உருவாக்குவதாகவே அமைந்துள்ளது. தமிழ் உரிச்சொற் பனுவல் ஆசிரியர் புதிய சொல்லாக்க முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர். 'ஊட்டி' (நூ.5842) என்னும் சொல் உணவுக் குழாய் துவங்கும் இடத்தைக் குறிப்பதற்காக இந்நிகண்டினுள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது வழக்கிலுள்ள சொல்லுக்குப் புதிய பொருள் சேர்ப்பதானச் சொல்லாக்க முயற்சியாகும். அதேபோல, பக்ஷிராஜன் (கருடன்) என்னும் சொல்லிற்கு இணையாகப் 'பறவை வேந்தன்' (நூ.1416) என்னும் சொல் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இச்சொல் தமிழ்ச்சொல் வடிவ அமைப்பில் இடம்பெறினும், மொழிபெயர்த்து அமைக்கப்படும் சொல்லாக்க முயற்சியுள் சிறப்பிடம் பெறுகிறது. உணவுப் பொருள்கள்மேல் ஈக்கள், சிறு பூச்சிகள் போன்றவை மொய்க்காமலிருக்க மூடி பாதுகாக்கப் பயன்படும் சிறுசிறு துளைகளைக் கொண்ட பொருளைக் குறிக்க, 'கண்ணுறை' (நூ.2238) என்ற சொல் புதிதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல் காரணம் கருதிப் படைக்கப்பட்ட கலைச்சொல்லாகும்.

## 4. வட்டார வழக்குச் சொற்கள்

தொல்காப்பியம் செய்யுள், வழக்கு என்ற இரண்டிற்குமான இலக்கணத்தை விளக்குவதாக அதன் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. இங்கு வழக்கு என்பது மக்களின் பேச்சு மொழியைக் குறிக்கின்றது. இன்றைய மொழியியல் ஆய்வுகளிலும் மக்களின் பேச்சு வழக்கிற்குச் சிறப்பிடம் தரப்படுகின்றது. அகராதிப் பரப்பிலும் வட்டார வழக்கு அகராதிகள் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இதற்கிணங்கத் தமிழ் உரிச்சொற் பனுவல் நிகண்டிலும், தாம் பிறந்து வளர்ந்த பகுதியான நாஞ்சில் நாட்டின் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தின்) வட்டார வழக்குச் சொற்களைப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர் கவிராய பண்டிதர் இராமசுப்பிரமனிய நாவலர். உதாரணமாக, வீட்டின் தாழ்வாரத்தை 'இறப்பு' (நூ.3243) என்றும், சோறு சமைத்தலை 'வடித்தல்' (நூ.4750) என்றும், முறத்தில் புடைத்தலை 'நாவல்' (நூ.4743) என்றும், அரிசியிலிருந்து குருணையை நீக்குதலைக் 'கொழித்தல்' (நூ.3839) என்றும், மூக்கடைப்பு நோயினைத் 'தடுமம்' (நூ.1207) என்றும், விளையாடல் என்பதைக் 'களித்தல்' (நூ.4627) என்றும், கேடு என்பதைக் குறிக்கச் 'சீத்தை' (நூ.4308, நூ.4301) என்ற சொல்லும் கொசு என்பதைக் 'கொதுகு' (நூ.1478) என்றும், உறங்குவதற்குப் பயன்படும் பாய் என்பதைப் பறம்பு (நூ.2734) என்றும் குமரி வட்டாரச் சொற்கள் இடம்பெற்றுள்ளதைக் குறிப்பிடலாம். நாஞ்சில் பகுதியின் இவ்வட்டார வழக்குச் சொற்களுள் சில மலையாளத்திலும் வழங்கப்படுகின்றன. அவ்வகையில், வட்டார வழக்குக் குறித்த ஆய்விற்குரிய ஆவணமாக இதுபோன்ற சொற்கள் அமைந்துள்ளன என்பது நிகண்டிளுள் புது மரபு என்பதை நன்குணரலாம்.

## 5. நிகண்டு மரபில் அகர வரிசை

பிங்கல நிகண்டிற்குப் பின்வந்த பெரும்பாலான நிகண்டுகளில், பயன்படுத்துபவர்களின் தேவை கருதிச் சில மாற்றங்கள் அவ்வவ் காலங்களில் அந்தந்த நிகண்டு ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள், எளிமையாக மனனம் செய்துகொள்வதற்கு ஏற்ற யாப்பு மாற்றம், குறுக்கு நோக்கீட்டிற்கு ஏற்ற வகையில் பலபொருள் ஒருசொல் பெயர்த் தொகுதியை அமைக்க வேண்டும் என்ற அளவில் செய்த முயற்சிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அவ்வகையில், பலபொருள் ஒருசொல் பெயர்த் தொகுதிச் சொற்களை எளிதில் கண்டறிய வேண்டி, அத்தொகுதி நூற்பாக்கள் எதுகை முறையில் அமைக்கப்பட்டன. சூடாமணி நிகண்டில் முதலில் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பின்னர், சொற்களைக் கண்டறிவதற்கு அகரவரிசை முறை

முன்னெடுக்கப்பட்டு, பலபொருள் ஒருசொல் பெயர்த்தொகுதிச் சொற்களின் முதல் எழுத்துக்கள் மட்டும் அகர வரிசையாக அமைக்கப்பட்டதை, 1594 - இல் சிதம்பர இரேவணச் சித்தரால் தொகுக்கப்பட்ட அகராதி நிகண்டிலும், இரண்டாம் எழுத்து வரையிலான அகரவரிசைமுறை சாமிநாதக் கவிராயரால் இயற்றப்பட்ட பொதிகை நிகண்டிலும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், சொற்களின் முழு அளவிலான அகரவரிசைமுறை தமிழ் உரிச்சொற் பனுவலில் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

தமிழில் வெளிவந்துள்ள நிகண்டுகளுள் நிறைவானதாக வந்துள்ள ‘தமிழ் உரிச்சொற் பனுவல்’ நிகண்டின் உள்ளடக்கங்களைச் சுருக்கமாகக் கண்டோம். மேலும், இந்நிகண்டில் நூற்பாக்களும் சொற்தொகையும் மிகுதியாக இருத்தல், சொற்களைத் தனித்தமிழ் நடையில் அமைத்தல், புதுச்சொல்லாக்க முயற்சிகள், வட்டார வழக்குச் சொற்கள், பலபொருள் ஒரு சொல் பெயர்த்தொகுதியை முழு அளவிலான அகர வரிசையோடு அமைத்தல் போன்ற புதிய மரபுகளை - முயற்சிகளை முன்னெடுத்துள்ளார் இதன் ஆசிரியரான கவிராய பண்டிதர் இராமசுப்பிரமனிய நாவலர். மேற்குறித்த இப்புதிய மரபுகள் தமிழ் நிகண்டு மரபில் காலத்திற்கு ஏற்றவாறும், பயன்பாட்டிற்குப் பொருத்தமாயும் அமைந்துள்ளன என்பது சிறப்பிற்குரியதாகும்.

## துணைநூற்பட்டியல்


1. இராம. சுப்பிரமணிய நாவலர், தமிழ் உரிச்சொற் பனுவல், செந்தமிழ் நிலையம், நாகர்கோவில். 1984,
2. திவாகர முனிவர், சேந்தன் திவாகரம், கழக வெளியீடு, சென்னை - 18. 1958
3. பிங்கல முனிவர், பிங்கலம், கழக வெளியிடு, 1968
4. கோவை. இளஞ்சேரனார், கோவை. (ப.ஆ.), சூடாமணி நிகண்டு, சரபோசி நூலகம், தஞ்சாவூர். 1999
5. இரா. நாகசாமி (ப.ஆ.), அகராதி நிகண்டு, மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 41. 1983.
6. எஸ். வையாபுரிப்பிள்ளை (ப.ஆ.), பொதிகை நிகண்டு, 1934
7. மா. சற்குணம், தமிழ் நிகண்டுகள் ஆய்வு, இளவழகன் பதிப்பகம், சென்னை. 2002,
8. எச். சித்திரபுத்திரன், சொல்லும் பொருளும் (அகராதியியல் ஆய்வுகள்), அன்னம், தஞ்சாவூர்.
9. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர், சாரதா பதிப்பகம், சென்னை - 05, 2006.
10. நன்னூல் விருத்தியுரை, வித்தியாநுபாலன அச்சகம், சென்னை - 1, 1957
11. பெ. மாதையன், தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 2005.
12. வ. ஜெயதேவன், தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1985.